மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பாதிக்குப் பாதி போதவில்லை என்று சொல்லவில்லை. கான்கிரீட் கம்பங்களைத் தயாரிக்க ஒப்பந்தக்காரர்கள் முன் வராத காரணத்தால் போர்டே அந்தக் கம்பங்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. தயாரிக்கும் ஏற்பாடுகள் ஓரளவு முடிந்து போதுமான அளவு உற்பத்தியும் செய்திருக்கிறார்கள்.

வனத்துறை நிலங்களில் பருப்புவகை பயிரிடுதல்

* 80 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள வனத்துறை நிலங்களில் துவரை, கொள்ளு பயிரிடும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலங்களில் பயிரிடத் திட்டமிடப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் வனத் துறையின் முந்திரித் தோட்டங்களின் இடைவெளியில் துவரை, கொள்ளு ஆகிய பருப்பு வகைகளைப் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) 1972-73-ம் ஆண்டு சுமார் 200 ஏக்கர்களில் முந்திரி தோட்டங்களின் இடைவெளியில் துவரை, கொள்ளு முதலியன பயிரிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்

சென்னை விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலை மூடப்பட்டதும், தொழிலாளரின் அல்லலும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை விதி 42-இன் கீழ் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கீழ்க்கண்ட ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்—

" the serious situation caused by the inaction of the Government in the WIMCO Match Factory, Madras and failure of the Government to arrange to lift the lock-out causing undue hardship to thousands of workers ".

இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானமாக வரும் என்பதை மட்டும் விளக்க வேண்டுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்த விம்கோ மாச் பாக்டரியில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். நல்ல முறையில் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் அங்கிருக்கும் மானேஜ்மென்டார் அடிக்கடி அவர்களைத் தொந்தரவு செய்து இந்தமாதிரி வேலை நிறுத்தத்திற்கு நிர்ப்பந்தமான நிலைமைகளுக்குக் கொண்டு வந்த காரணத்தால் மாதங்களாக அது மூடப்பட்டிருக்கிறது. சர்க்கார் தலையிட்டு சமரச ஏற்பாடு செய்து அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கான ஏற்பாடு களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, திருவொற்றியூர் விம்கோ தொழிற்சாலையில் சுமார் 1,700 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். ஊதிய உயர்வு, அகவிலைப் படி உயர்வு, பிற படிகள், போனஸ் திட்டம், தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்கு 50,000 ரூபாய் மானியம் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கை உள்ளிட்ட பல கோரிக்கைகளுக்கு ஆதரவாக வேலைநிறுத்த அறிவிப்பு ஒன்றை 19—10—1972 அன்று விம்கோ தொழிலாளர் சங்கம் கொடுத்தது. சங்க அறிவிப்பின்படி 4—11—1972-க்குப் பிறகு வேலை நிறுத்தம் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் 4—10—1972-ல் தீப்பெட்டி லேபிள் ஒட்டும் பிரிவு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது. ஒரே டிபார்ட்மெண்டில் உள்ள இரண்டு இயந்திரங்களை இயக்குவதில் ஏற்பட்ட தகராறின் காரணமாக அந்த வேலைநிறுத்தம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பணி நிறுத்தப் பட்டதன் காரணமாக மற்றத் தொழிலாளர்களுக்கும் வேலையின்றி 'லே ஆப்' செய்யப்பட்டது. 14—11—1972 முதல் வேலை நிறுத்தமாக ஆரம்பித்தனர், சங்கத்தின் கோரிக்கைகளும், ஏற்கெனவே ஏற்பட்ட உடன்பாடுகளைச் செயல் படுத்த சங்கம் தவறிவிட்டது என்ற நிர்வாகத்தின் முறையீடும் அடங்கிய முழுப் பிரச்சினையும் வேலை நிறுத்தம் தொடருவதற்கு முன்னாலேயே சென்னை தொழிலாளர் நல அதிகாரி அவர்களின் விசாரணைக்கு அனுப்பப்பட்டது. அவருடைய யோசனையை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அதற்குப் பிறகு தொழிலாளர் நல ஆணையாளருக்கு இது விசாரணைக்கு அனுப்பப் பட்டது. அவர் சொன்ன யோசனையையும் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. இதிலுள்ள முக்கிய விஷயம்—தொழிற்சங்கமோ அல்லது தொழில் நிர்வாகிகளோ எங்களிடத்தில் அதிகாரபூர்வமாக இதுவரை அணுகவில்லை என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில தொழிலாளர்கள் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. நாராயணசாமி அவர்களை அழைத்து வந்து விவரங்களைக் கூறினார்கள். அதற்குப் பிறகு லேபர் கமிஷனர் மூலமாக விசாரணை நடைபெற்று வருகிறது.

விசாரணை தீர்ந்தவுடன் இதில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, பேரவை நிகழ்ச்சிகளை ஒற்றிவைத்து இதை விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கோள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லையென்று கருதி இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

3. அறிக்கை அளித்தல்

வேளாண்மைத் துறை பற்றிய அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்த நடவடிக்கைகள் மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU PALANIVEL RAJAN : Sir, I rise to present the Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the report on Agriculture Department.

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடங்கும். திரு. காவேரிமணியம் அவர்கள், அவர்களது பேச்சைத் தொடருவார்கள். உறுப்பினர்கள் ஏழு நிமிடங்களில் முடித்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

5. அரை மணி நேர விவாதம் அனுமதிப்பது குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : Sir, yesterday when a question was asked, I also said that the question may be referred, under Rule 40 of our Assembly Rules, for a half-hour discussion. The rule says that it has to be raised in the House and then the Deputy Speaker should give his ruling. I raised it, but I do not know if it was recorded. Now, I want to raise it and I make a formal request that a half-hour discussion may be allowed under Rule 40 on that question.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றே சொல்லியிருக்கலாம். கவர்னர் அவர்களது உரைமீது விரிவாகப் பேசலாமே.